பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 29/93

பொது நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
1993, டிசம்பர் மாதம் 14 ஆந் திகதி.

எல்லா செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரசாங்க கூட்டுத்தாபனங்கள்,
நியதிச் சட்ட சபையின் தலைவர்களுக்கும்.

தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா/கனிஸ்ட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் சான்றிதழ் பெற்ற நடுத்தர மட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை இரண்டாவது திணைக்களப் பரீட்சையிலிருந்து விடுவித்தல்.

---

மேற்கூறிய விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 1981.11.16 ஆந் திகதி 377ஆம் இலக்கமுள்ள தாபன சுற்று நிருபத்தின் 03வது பந்தி கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.

02. நடுத்த மட்ட தொழில்நுட்பச் சேவையின் 11வது வகுப்பின் "ஆ" பிரிவிலிருந்து 11வது வகுப்பின் "அ" பிரிவுக்கு பதவி உயர்வு செய்யும் பொருட்டு தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ்/கனிஸ்ட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் சான்றிதழ் பெற்ற நடுத்தர மட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள்.

1. நிதிப் பிரமாணங்கள்

11. தாபன விதிக்கோவை

111. திணைக்கள பிரமாணங்கள்

ஆகிய வினாப்பத்திரங்களில் சித்தியடைதல் வேண்டும். இவர்கள் மேற் கூறிய பரீட்சையின் தொழில்நுட்ப வினாத்தாளிலிருந்து விடுவிக்கலாம்.

03. இதன்படி குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு விதிமுறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

ஒப்பம்: எம்.டி.டி.பீரிஸ்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.